OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: நான்கு

A T'S

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 18 ஞாயிற்றுக்கிழமை (02 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 37

# ஆகக் கூடிய இராணுவ பலத்தை பயன்படுத்தி யுத்தத்துக்கு முடிவு

## பின்னடைவுகளைப் போக்கி வெற்றிகாண புதிய தளபதி உறுதி

கொழும்பு, ஜனவரி 2

இதுவரை இருந்ததைவிட ஆகக்கூடிய இராணுவ பலத்தைப் பயன்படுத்தி, வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப் போவதாக--

ஸ்ரீலங்கா இராணுவத்தின் புதிய தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா, நேற்றுப் பதவியேற்ற சிறிது நேரத்தில் தெரிவித்தார்.

யுத்த முனையில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்து ஆராய்ந்து அவற்றைப் போக்கி முன்னேறி வெற்றி காணப் போவதாகவும் புதிய இராணுவத் தளபதி உறுதி கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் டி சில்வா நேற்றுக் காலை பதின்மூன்றாவது தளபதியாக லெப். ஜெனரல் ஜெரி இராணுவத் தலைமையகத்தில் நடந்த வைபவத்தில் பதவி ஏற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதும் பதவி ஏற்றது தொடர்பாக விடுத்த செய்தியிலும் அவர் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் இராணுவத்துக்கு ஏற்பட்ட தோல்விகளை ஆராய்ந்து, பலவீனங்களை இனங்கண்டு, சரியான பரிகாரங்களைக் காணுவதே இப்போதுள்ள பிரதான பணியாகும்.

மனித சக்தி வளமே இராணுவத்தை எதிர்நோக்கும் முக்கிய முட்டுக்கட்டையாக இப்போது இருந்து வருகிறது.

படையினரின் சேமநலன்களும் பெருமளவு முன்னேற்றப்படவேண்டும். படையினருக்குப் பயிற்சி அளிக்கவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தோர் எண்ணிக்கை 10 ஆக உயர்வு

யாழ்ப்பாணம், ஜன 2

சாவகச்சேரியில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற விமானத்தாக்குதலில் காயம் அடைந்தவர்களில் மேலும் ஒருவர் மரணமானார்.

இதனை அடுத்து உயிரிழந்தோர் எண்ணிக்கை பத்தாக உயர்ந்துள்ளது.

யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அற்புதராசா திலீபன் (வயது 5) என்பவரே நேற்று மரணமானவர் ஆவார். (இ-15)

## முச்சந்தி முனி



புதிசா வந்தவரும் பழைய பல்லவிதான் பாடுகிறார் பாருங்கோ......!

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 2

மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் நாளை திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகின்றன. (இ-111)

## புத்தாண்டு பிறந்த நேரம் ஷெல்வீச்சு! துப்பாக்கிச் சூடு!

புத்தாண்டு பிறந்த நேரம் படையினர் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஷெல்வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

வெள்ளி இரவு 10.30 இல் இருந்தே ஷெல் வீச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

சரியாக 12 மணிக்கு மண்டைதீவு முகாமில் இருந்து ஆட்லறி ஷெல் ஒன்று ஏவப்பட்டது.

மற்றும் பலாலி, மாதகல் முகாம்களில் இருந்தும் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

அளவெட்டி, சீனன்தலட்டி முகாமில் உள்ள படையினர் நள்ளிரவு புத்தாண்டு பிறந்த நேரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதற்கிடையில் நேற்றுக் காலை காரைநகர் கடலில் இருந்து சுழிபுரம், திருவடிநிலை, புளியந்துறைக் கடல் பகுதிகளை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். (இ-13-185)

## 'குமண' கப்பல் சேவையை நிறுத்துவது குறித்து ஆராய்வு!

யாழ்ப்பாணம், ஜன. 2

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் வடக்கிற்கான கப்பல் சேவையை நிறுத்துவது குறித்து ஆராயப்படுவதாக தெரியவந்தது.

வடக்கிற்கு உணவுப் பொருள்களை ஏற்றி வருவதற்கு—

பருத்தித்துறையில் இருந்து கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு திருகோணமலை வரை போக்குவரத்து சேவையை வழங்கவும்—

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு கடந்த 3 வருடங்களாக 'குமண' கப்பலை அமர்த்தியிருந்தது.

தற்சமயம் ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடியால் இந்த சேவையை முற்றாக நிறுத்துவது குறித்தும்—

மாற்றாக சிறிய கப்பல் ஒன்றை சேவையில் ஈடுபடுத்தும் சாத்தியம் குறித்தும்—

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் கொழும்பு மற்றும் ஜெனிவா அலுவலகங்களில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது. (த-3)

# லெப். ஜெனரல் பட்டத்தை சிசில் பயன்படுத்தத் தடை!

## பழிவாங்கும் விதத்தில் சட்டத்தில் திருத்தம்

இராணுவத்திலிருந்து தாமாகப் பதவி விலகும் அதிகாரிகள், பதவி விலகிய பின்னர் தமது பதவி நிலைகளைப் பயன்படுத்த முடியாது என ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசின் உயர்மட்டத் தலைவர்களுக்கும் தமக்கும் இடையே ஏற்பட்ட கருத்து மோதல்களை அடுத்து இராணுவத் தளபதியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தமது பதவியிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டார் என்பது தெரிந்ததே.

அவர் தமது பதவியிலிருந்து நேற்று முன்தினம் விலகிக் கொண்டதை அடுத்து—

ஸ்ரீலங்கா அரசு இந்த அறிவிப்பை விடுத்திருப்பதால், இது இவரைப் பழிவாங்குவதற்காக அரச உயர்பீடத்தினர் எடுத்த நடவடிக்கை என்று இராணுவ அதிகாரிகள் சிலர் கருத்து வெளியிட்டனர்.

அரசின் இந்த அறிவிப்பை அடுத்து—

இனிமேல் சிசில் வைத்தியரத்ன, தமது பதவி நிலையான லெப்டினன்ட் ஜெனரல் என்ற பட்டத்தை தமது பெயருக்கு முன்னால் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமது பதவிகளை விட்டு விலகி அல்லது ஓய்வுபெற்றுச் செல்லும் இராணுவ அதிகாரிகள் தமது பதவி நிலைகளுக்குரிய பெயர்களைத் தொடர்ந்து பயன்படுத்துவது உலகில் வழமையான நடைமுறை என்பது தெரிந்ததே.

ஸ்ரீலங்கா அரசினால் வெளி

(3 ஆம் பக்கம் பார்க்க)

# உரிய காலத்தில் தீர்வு இன்றேல் வடக்கு நிலைமை மலையகத்திலும்

## 'லங்கா தீப' எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 2

மலையகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை உரிய காலத்தில் தீர்த்து வைக்க அரசு தவறுமானால் அங்கும் வடக்கு - கிழக்கு போன்ற நிலைமை ஏற்படும்.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'லங்கா தீப' சிங்கள பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது.

வேலை வாய்ப்பு மற்றும் உயர்கல்வி விவகாரங்களில் பெரும் பாரபட்சம் காட்டப்பட்டமையினாலேயே வடக்கு - கிழக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்பட்டது.

இதே நிலை மலையகத்திலும் ஏற்படாமல் இருக்க, இளைஞர்களின் பிரச்சினைகளில் உரிய முறையினைக் கையாள்வதின் மூலம் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனி நபர் நலன் காக்கும் அரசியல்வாதத்திலும், தலைவர்கள் மட்டத்திலே பாதுகாப்பும் பதவிகளும் வழங்குவதின் மூலமும் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இதனை அரசியல் தலைவர்கள் இப்போதாவது உணர வேண்டும்.

மலையக மக்களின் பிரச்சினையையும் தனியே தனிநபர் பிரச்சினையாகக் கருதாது தேசியப் பிரச்சினையாகக் கருத வேண்டும்.

— இவ்வாறு அப்பத்திரிகை மேலும் கருத்து வெளியிட்டுள்ளது. (உ)

# வவுனியா இராணுவகட்டுப்பாட்டு பகுதியில் தமிழரை பலவந்தமாக குடியேற்ற திட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 2

வவுனியாவில் சிங்கள — முஸ்லிம் காடையர்களால் சூழப்பட்ட — இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள — பிரதேசங்களில் பலவந்தமாக தமிழ் மக்களைக் குடியேற்ற ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

செட்டிகுளம் பகுதியில் உள்ள முகத்தான் குளம் பிரதேசத்தில் ஆயிரம் குடியிருப்புகளை அமைத்து, அதில் தமிழ் மக்களைக் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாவது ஈழப்போரின் போது செட்டிகுளம் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து மடு இடம்பெயர்ந்தோர் முகாமில் வசித்துவரும் மக்களே இக்குடியிருப்புகளில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தென் மாகாணசபை கலைப்பு சட்டவிரோதம்

### பதவிஇழந்த முதல்வர் கூறுகிறார்

கொழும்பு, ஜன-2

தென்மாகாண சபையை அதன் ஆளுநர் கலைத்தது சட்ட விரோதமான செயலாகும்.

கலைக்கப்பட்ட சபையின் முதலமைச்சரான அமரசிறி தொடங்கொட இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது:-

சட்ட விதிகளின்படி சபையைக் கலைக்க முன்னர் அது குறித்து ஆளுநர், முதலமைச்சரின் விருப்பத்தை விசாரிக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

சபையில் எவ்வித ஒழுங்கீனங்களும் இடம் பெறவில்லை சபைப் பணிகள் எப்போதும் ஸ்தம்பிக்கவில்லை.

இடைக்கால கணக்கு அறிக்கை விதிமுறைப்படியே அங்கீகரிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் கூட இத்தகைய இடைக்கால கணக்கு அறிக்கைகள் ஏழு சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. தென் மாகாணசபையிலும் ஐ.தே.க. ஆட்சி நடத்துகையில் இடைக்கால கணக்கு அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாண சபையிலும் முதலமைச்சர் கொழும்பில் இருந்தவாறு இடைக்கால கணக்கு அறிக்கை மூலம் நிதி பெற்றிருக்கிறார்.

எதிர்பாராத சமயங்களில் மாகாண சபை இவ்வாறு நிதிக்கு ஏற்பாடு செய்வது இயல்பானதாகும். எனவே சபையில் எவ்வகை ஒழுங்கீனமும் இடம்பெறவில்லை. — என்றார். (உ)

## சர்ச்சைக்குரிய உறுப்பினர் ஆயுதபாணிகளின் காவலில்

கொழும்பு, ஜன .2

கலைக்கப்பட்ட தென் மாகாணசபையின் சர்ச்சைக்குரிய உறுப்பினர் எனக் கருதப்படும் விமல் பிரான்ஸிஸ்கு ஆயுதபாணிகளின் காவலுக்கு மத்தியில், சுதந்திரமற்று தமது கருத்தைத் தெரிவிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளார்.

கலைக்கப்பட்ட மாகாண சபையின் முதல்வரான அமரசிறி தொடங்கொட பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பிரான்ஸிஸ்கு ஐ.தே.கவை ஆதரிப்பதாக அறிவிக்கப்பட்டதும்—

அதனையடுத்து தென்மாகாணசபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டதும் தெரிந்ததே.

தம்மைப் பாதுகாக்குமாறும்—

தாம் தொடர்ந்து அமரசிறி தொடங்கொடவையே ஆதரிப்பதாகவும்—

விமல் பிரான்ஸிஸ்கு தம்மைச்சந்தித்த உறுப்பினர்கள் சிலரிடம் கூறியதாக அமரசிறி தொடங்கொட சொன்னார்,

மாகாணசபைக் கூட்டத்துக்கு அவர் வருவாராயின் தம்மையே ஆதரிப்பார் என்றும் தொடங்கொட சொன்னார், (உ-6)

## மாகாணசபையை ஒழிக்க சர்வசன வாக்கெடுப்பு?

மாகாணசபை முறையை ஒழிப்பதற்காக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை அரசு நடத்தக் கூடும்.

அரசியல் வட்டாரங்களில் இவ்வாறு சந்தேகம் நிலவுவதாக பி.பி.ஸியின் சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

தென் மாகாண சபை சர்ச்சைக்குப் பின் கலைக்கப்பட்டு விட்டது; மேல் மாகாண சபை, வடமேல் மாகாண சபை ஆகியன எதிர்க்கட்சி வசம் உள்ளன. தொண்டமானுக்கும் அரசுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளதால் மத்திய மாகாண சபையிலும் ஐ. தே. க. ஆட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாகாண சபை முறையை முற்றாக ஒழித்து விட அரசு முயற்சிக்கக் கூடும் எனக்கருதப்படுகின்றது.

என்றாலும் —

1987 இல் செய்யப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபை முறையை ஒழிப்பதற்கு இலங்கை அரசுக்கு திராணி உண்டா என்பதே பிரச்சினைக்குரியதாகும் — இவ்வாறு பி.பி.ஸி.மேலும் குறிப்பிட்டது. (உ-6)

## குடாநாட்டில் சுயபொருளாதார அபிவிருத்திக்கு முன்னுரிமை

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு விவசாய அபிவிருத்தி திட்டங்களுக்கே முதன்மை இடம் வழங்கப்படவிருக்கிறது. சுயபொருளாதார அபிவிருத்தி நோக்கம் கொண்ட திட்டங்களாக அவை அமையும்.

யாழ். செயலகத்தில் கடந்த வியாழன் நடந்த 94 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டங்கள் தொடர்பான கூட்டத்தில் மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது.

பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்கு கிடைக்கும் நிதியில் பெரும் பகுதியை சுயபொருளாதார அபிவிருத்தி நோக்கம் கொண்ட விவசாய செயற்திட்டங்களுக்கு பயன்படுத்துவதென இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பகுதிகளிலும் மேற்கொள்ள உத்தேசிக்கப்படும் திட்டங்களின் விவரங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (த-3)

## ஆப்கனில் மீண்டும் போர்

காபுல், ஜன. 2

ஆப்கானிஸ்தானில் மீண்டும் உக்கிரமான போர் ஆரம்பித்துள்ளது.

காபூல் நகரத்தில் இரண்டு குழுக்களுக்கு இடையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (இ-க)

## கெமரூச் மீது தாக்குதல்

நொம்பன், ஜன 2

கம்போடியாவில் அரச படைகள் கெமரூச் இயக்கத்தினரின் முகாம் ஒன்றின் மீது பெரும் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். [இ]

## காற்சட்டையில் இருந்த கைக்குண்டு வெடித்து

### பூநகரியில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், ஜன-2

கடந்த திங்கட்கிழமை பூநகரி ஸ்ரீலங்கா இராணுவ முகாம் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவரின் காற்சட்டையில் இருந்த கைக்குண்டு ஒன்று தற்செயலாக வெடித்ததில் அவர் உயிரிழந்தார்.

படுகாயமுற்ற இந்தச் சிப்பாய் விமானம் மூலம் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு உயிரிழந்தார்.

## தேசிய பாடசாலைகளை 450 ஆக அதிகரிக்க முடிவு

கொழும்பு, ஜன 2

தேசிய பாடசாலைகளை 450 ஆக அதிகரிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் குறைந்த பட்சம் ஒரு தேசிய பாடசாலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை 90 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது.

கூடிய விரைவில் இந்த எண்ணிக்கை 243 ஆக அதிகரிக்கப்படும். அடுத்த ஆண்டில் 153 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பத்தினர் ஆண்டாக 94 ஆம் வருடம் பிரகடனம்

நேற்று பிறந்த 1994 ஆம் ஆண்டை குடும்பத்தினர் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்திருக்கிறது.

நாடுகள் பலவற்றில் உள்ள மக்கள் மத்தியில் குடும்ப உறவுகள் மறைந்து வருவதற்கு காரணமாக இருக்கும் சமூகத் தாக்கத்தைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மூன்று மாதங்கள் நிரம்பிய கங்கேரியன் பிராமா, ஒரு சோடி சில்க்கி, ஒரு சோடி ஒருமாதம் நிரம்பிய பொலிஸ் பாமாஸ், பன்ரம், சில்க்கி, வான்கோழி முட்டைகளும் பெற்றுக்கொள்ளலாம். திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப் புளியடி, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (28721)

நல்லின ஜேர்மன் செப்பேட் அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளுமிடம்: K.S. R. போட்டோஸ் இல. 12A, கந்தப்புராண வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (28674)

நல்ல நிலையிலுள்ள Dining Table (சாப்பாட்டுமேசையும்) இதற்குரிய குசன் கதிரைகள் ஆறும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (28677)

52 நாட்கள் அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. க. நடராசா, புலேந்திரன் வீதி, (ஆசைப்பிள்ளையில் ஒழுங்கை) கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட், கோண்டாவில். (28698)

பாவித்த நல்ல நிலையில் உள்ள தேக்கு, முதிரை அலுமாரி, உருக்கு அலுமாரி தையல் மெஷின், வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்குண்டு. கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, (முடமாவடி) திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (28696)

இரண்டு வெள்ளை பொமரேனியன் ஒரு மாதக் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இல: 9, மூன்றாம் குறுக்குத் தெரு (அடைக்கல மாதா கோவில் பக்கமாக), யாழ்ப்பாணம். (28645)

### வீடு விற்பனைக்கு

2 பரப்புக் காணியும், வீடும் M. P. C. S. லேன், திருநெல்வேலி வடக்கில் சந்தைக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புவோர் எம்முடன் நேரடியாக தொடர்புகொள்ளவும். இ. பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜென்சி, 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (28706)

### வாங்க / விற்க

காணி வீடு வாடகைக்கு கொடுக்கவோ அல்லது விற்பனை செய்யவோ விரும்புபவர்களும் வாங்க விரும்புபவர்களும் நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளலாம். இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி, இல. 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (28578)

### பொக்கற் கலண்டர்

சாயிபாபா பொக்கற் கலண்டர் '94 பாபாவின் பல்வேறு படங்கள் பொக்கற் கலண்டராக வெளிவந்துள்ளன. மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும் இடம்: பகவான் மருந்தகம், 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6784)

### தேவை

யாழ். சிவலிங்கப்புளியடிக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் இரண்டு பரப்பு காணி தேவை. விற்பனை செய்யவிரும்புவோர் நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளலாம். இ. பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜன்சி, இல. 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (28579)

### மணமகள் தேவை

4இல் செவ்வாய், நட்சத்திரம் விசாகம், வயது 30 நில அளவையாளராகத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. இ. பாஸ்கரன், 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (28631)

### போட்டோ பிரதிகள்

புதிய இயந்திரம் மூலம் தெளிவான, எல்லா அளவிலும், போட்டோ பிரதி எடுக்க உடனுக்குடன் நாட வேண்டிய இடம்: ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர், மக்மிலன் யாழ்ப்பாணம். (சி-6850)

### திருமண சேவை

சொந்த தொழில் புரியும் வசதியான மணமகன்கள் எம்மிடம் உண்டு. சாதக விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இ. பாஸ்கரன், திருக்குமரன், மங்கள ஏஜன்சி, 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (28580)

## கடன் அதிகரித்தது

புதுடில்லி, ஜன. 2 இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 7ஆயிரத்து 180 கோடி டொலராக அதிகரித்துள்ளது. புதுடில்லி நிதி அமைச்சு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (த-எ)

## நியூ
## ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

புலமைப் பரிசில் 1994 ஆம் ஆண்டுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

கணிதம் — S S பிள்ளை

தமிழ் — திருவாசநாதன்

மாதம் தோறும் பரீட்சை நடைபெறும்.

(சி-6856)

## விஞ்ஞானக் கல்வி நிலையம்

நல்லூர்

## கல்வியாண்டு 1994

**ஆரம்பம் 06-01-94 மாலை 3மணி**

ஆண்டு 6 முதல் 11 வரை

| | |
|---|---|
| விஞ்ஞானம் | J. J. கொலின்ஸ், K. T. தவச்செல்வன் |
| கணிதம் | ஜெயக்குமார், யோகேஸ்வரன் |
| தமிழ் | தங்கராஜா, திருமதி J. ஜோர்ச் |
| சமூகக்கல்வி | க. கோபி, சேகர், பாலன் |
| ஆங்கிலம் | சௌந்தரபாண்டியன், நிமலன் |
| வர்த்தகம் | E. ஜீவா |

முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும். [சி-6872]

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

by MR M A H RI
B. A Dip In Eng.

ஆரம்பம் 3—1—94 திங்கள் காலை 9 மணி

Time Table
பிரிவு I :- செவ்,வியா 9 மணி
பிரிவு II :- சனி,ஞாயிறு 11 மணி

அனுமதியை முன்கூட்டியே பெறவும்.

## நியூ சயன்ஸ் சென்ரர்

எழிலகம் முன் லேன், யாழ்ப்பாணம். (சி/6796)

## விலங்கியல்

R ஈஸ்வரதாசன்
B Sc. (Cey), Dip. In Ed.

க. பொ. த உயர்தரப் பரீட்சையில் தோன்றிய மாணவர்களுக்கான

## PAPER CLASS

ஆரம்பம் 03-01-1994 திங்கள் 4 30 மணி

## SCIENCE COLLEGE

பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம். (சி/6797)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 01 — 05 — 1928



மறைவு: 25 — 12 — 1991

### திருமதி செல்வராசு வேலாயுதம்

திதி: 02 – 01 – 1994

அகிலத்தில் எமைத்தந்த அன்புத் தெய்வமே! இதயத்தில் உமைவைத்து ஏங்குகிறோம்! பாசமுடன் நேசம் வைத்து பக்குவமாய் எம்மை சிலமுடன் வாழ வைத்த அன்பு அம்மாவே! உயிருடன் கலந்தே ஒளி தந்த மெழுகுவர்த்தி உருகி முடிந்து இரண்டாண்டு சென்றாலும் பண்ணில் உள்ளவரை உனை மறவோம்! உனை மறவோமா!

உங்கள் பிரிவால் துயருறும்;
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பயிற்றோலை
அ கவேலி தெற்கு,
[illegible]

(28709)

## பிறமொழி ஆசிரியர் தேவை

ஸ்பானிஸ், பிரெஞ்சு, ஜேர்மன், ருஷ்யன், ஜப்பான் போன்ற சர்வதேச மொழிகளைத் தமிழ்மூலம் கற்பிக்க அனுபவசாலிகள் தேவை. தகைமைச் சான்றிதழ்களுடன் 07 - 01 - 94 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்:
582 மே/பா உதயன்

(28705)

வடபிராந்திய
யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்

## விசேட பொதுச் சபைக் கூட்டம்

அன்புடையீர்!

காலம்: 09-01-1994 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: காலை 10 மணி

இடம்: யாழ் வர்த்தகர் சங்க பணிமனை 21, நவீனசந்தை. யாழ்

யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கலந்து கொள்கின்றனர். மிக முக்கிய 3 விடயங்கள் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கவிருப்பதால் அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மு குறிப்பு:
வர இயலாத உறுப்பினர்கள் ஸ்தாபனத்தை மூடியோ அல்லது பொறுப்பாளரையோ கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

நன்றி.

மு. பத்மநாதன்
செயலாளர்.

[சி 6874]

## YARL HALL கல்வி நிலையம்

(திருமறைக் கலாமன்றம் முன்பாக)
பிரதான வீதி, யாழ்ப்பாணம்

கிளை

## PERSONAL INSTITUTE

இல, 2, சீனிவாசகம் வீதி, கொட்டடி.

## கல்வியாண்டு 1994 - புதிய வகுப்புகள்

ஆரம்பம்: 05 — 01 — 1994 புதன் மாலை 4-00 மணி

ஆண்டு 5 முதல் O/L வரை சகல பாடங்களும் ஆரம்பமாகின்றன.

எமது ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| விஞ்ஞானம்: | இரா. செல்வவடிவேல், J. கருணைநாயகம், S. ஜெனத் |
| தமிழ்: | S. கதிர்காமத்தம்பி, S. வாசுகி. |
| கணிதம்: | S. வாமதேவன், M. குமாரவேல், S. அனுசியா, |
| சமூகக்கல்வி | N. மயில்வாகனம், M. நித்தியானந்தன், S. சிவாஜினி. |
| வர்த்தகம்: | A. அக்ஸ்ரின், M. சிவகுமார், |
| ENGLISH ஆங்கிலம்: | T. சௌந்தரபாண்டியன், P. பெனடிக்ற் |
| ENGLISH-LITERATURE: | T. சகாதேவன். |

(6886)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

உருவாய்: 15 — 10 — 1922



அருவாய்: 03 — 12 — 1993

### அமரர் முத்துத்தம்பி தருமலிங்கம்

(இணுவில் கிழக்கு ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய பரிபாலகரும் (அர்ச்சகர்), பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்)

03-12-1993 அன்று சிவபதமெய்திய இணுவில் கிழக்கு, அங்கிலிப்பாயைச் சேர்ந்த எமது தந்தையாரின் மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது தந்தையாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (02 - 01 - 1994) காலை 10-00 மணியளவில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

— பிள்ளைகள்.

அங்கிலிப்பாய்,
இணுவில் கிழக்கு.

(28722)

## உதவித் தாதியர் பயிற்சி
## DIPLOMA IN NURSING - AID

### 28 - 01 - 1994இல் ஆரம்பம்

- ★ 18 மாதகால பயிற்சி நெறி
- ★ தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)
- ★ உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்புடையதான சான்றிதழ்.
- ★ "அக்குபங்சர்" மருத்துவத்துறை இலவசமாக கற்பித்து சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு:- மாவீரர், போராளிகள் குடும்ப அங்கத்தவர்களுக்கு இலவச பயிற்சியும், இலவச தங்குமிட வசதியும் அளிக்கப்படும்.

விவரங்கள்:-

### சாயி மருத்துவக் கல்லூரி,

இல 6, பருத்தித்துறை வீதி (1 ஆம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்

(சி-6842)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## கல்வியாண்டு - 1994

O/L EVENING CLASSES (3-15 — 6-00)
SAT., SUN. CLASSES (8-00 — 1-00)

### ஆண்டு 10, 9, 8, 7, 6

ஆரம்பம்: **06 — 01 — 1994** (வியாழன்) மாலை 3-15 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி-6863)

அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடத்தப்படும்

## இலக்கிய, ஓவியப் போட்டிகள்

1994-03-08இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப் போட்டிகளை நடத்த விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்த வகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:

- ★ படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்.
- ★ கவிதைகள் முப்பத்தைந்து வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்கவேண்டும். ஓவியங்கள், போட்டியாளர்கள் விரும்பும் அளவில் வரையப்படலாம்.
- ★ போட்டியாளரின் சொந்தப் பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
- ★ கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கிய, ஓவியப் போட்டிக்கான படைப்புக்கள்" என்று குறிப்பிடப்பட வேண்டும்.
- ★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- ★ போட்டி முடிவு திகதி: **1994 — 01 — 20**
- ★ படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி:

### சுதந்திரப் பறவைகள்

வெளியீட்டுப் பிரிவு,
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு,
கோண்டாவில்.

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக நடத்தப்படும் இவ் இலக்கிய ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புக் கேட்டுக்கொள்கின்றது.

— விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு.

(சி-6688)

## IN MEMORIUM
## 31 ST. DAY

### LOURDES RAYMOND MUTHIAH

God created thee to serve the World;
Thou wert blessed with infinite mercy;
A Loving Father, A Beloved Husband;
An Efficient Engineer, A devoted Social worker;
Above all every inch a Gentleman;
Chairman of our Management Council;
The Creator called thou to his Abode;
Perhaps to serve the Noble Souls there;
May thou rest in Peace;
Which thou denied thyself here.

STAFF GUILD,
JAFFNA COLLEGE -
INSTITUTE OF TECHNOLOGY.

Vaddukoddai,
02 - 01 - 1994.

(28646)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்க ஸ்தலங்கள் மீது அடிக்கடி குண்டு வீச்சு;
# பூநகரி கூட்டுத்தளம் அழிப்பினால் தெற்கில் நடுக்கம்!

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சத்தில்லாத சங்கற்பம்!

புதுவருடம் பிறந்த கையோடு ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி அரசியல் சங்கற்பம் ஒன்றைச் செய்திருக்கிறார். இந்த வருடத்தில் பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழித்து விடுவது என்பதே அவரது புத்தாண்டுச் சங்கற்பம்!

பயங்கரவாதம் என்று அவர் பெயர் சூட்டியிருப்பது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கே என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதனைப் பூண்டோடு அழிப்பது என்பது தமிழர் போராட்டத்தை நசுக்கி விடுவது; அதற்காகத் தமிழர்களைப் பூண்டோடு அழிப்பது என்பதாகும்.

பயங்கரவாதம் எனப்பெயர் சூட்டி தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க முயலாத ஸ்ரீலங்காவின் சிங்களத் தலைவர் யார்? எவருமே விதி விலக்கல்லர். ஜே. ஆர்., லலித், பிரேமதாசா, ரஞ்சன் விஜேரத்னா என்று எத்தனை பேர் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கப் போவதாக வரிந்து கட்டினார்கள். சங்கற்பம் செய்தார்கள்? எவராலும் முடிந்ததா?

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று முழங்கிய, முரசறைந்த ஜே. ஆர். 'பயங்கரவாதத்தை' பூண்டோடு ஒழிக்க பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்காவை யாழ்ப்பாணம் அனுப்பிக் கண்ட பயன் என்ன?

தமிழர்களின் ஆயுதப் போராட்ட வடிவம் மிகத் தீவிரமாக வளர்ந்ததே அன்றி மழுங்கிவிடவில்லை. அதனால் அவர் சிங்கள இராணுவத்தைக் காப்பாற்றும் நோக்குடன் இந்திய இராணுவத்தை உதவிக்கு அழைத்தார்.

அவர்களால்தானும் தமிழர்களின் போராட்டத்தை நசுக்க முடிந்ததா? ஆயிரத்துக்கும் அதிகமான சிப்பாய்களை இழந்து இந்திய இராணுவம் அவமானத்துடன் நாடு திரும்ப வேண்டியதாயிற்று.

இத்தனைக்கும் பின்னர், பூநகரித் தோல்வியையும் மறந்து, தள நிலைமையை மறைத்துப் ''பயங்கரவாதத்தை'' பூண்டோடு அழிக்கப் போவதாக விஜேதுங்கா குளுரைப்பது ஏனையவர்கள் தழுவிய தோல்வியைவிட மாபெரும் தோல்வியை அரவணைப்பதற்குத் தான். மறுவளமாகப் பார்த்தால் ஒரு வகையில் தமிழர் போராட்டம் மேலும் வளர்ச்சி அடைவதற்கு அவர் உதவப் போகிறார் என்று கொள்ளலாம்!

தமிழர்களை அழிப்பதன் மூலம், அவர்களின் உரிமைப் போரை நசுக்க திடசங்கற்பம் பூண்ட அதே வேளையில், ''வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள் என்றென்றும் எங்கள் நண்பர்கள்'' என்று அவர் கூறுவது—

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் அவரது ஆசாட பூதித் தனத்தை நன்கு புலப்படுத்துகிறது.

புதிய வருடத்தில் நீதியும், அமைதியும், ஸ்திரத் தன்மையும் கொண்ட இலங்கையை உருவாக்குவதே தமது புத்தாண்டுக் குறிக்கோள் என்று கூறியிருப்பது வெளி உலகத்துக்கு தான் நீதியானவன் என்று காட்டி, அதன் உதவிகளைப் பெறுவதுற்காகுப்!

''பயங்கரவாதத்தை'' பூண்டோடு அழிப்பதாகக் கொக்கரித்தால், சிங்களவர்களின் உணர்ச்சிகளைத் தூண்டி அவர்களின் வாக்குகளைப் பெற்று விடலாம் என்றும் விஜேதுங்கா நினைத்திருக்கிறார்.

பாவம் அவர்! தமது புது வருடக் கணக்கு முற்றாகப் பிழைக்கப் போகிறது என்பதனை முன்னோக்கிப் பார்க்கும் திறமை அவருக்கு இல்லை.

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தில் அவரது படைச் சிப்பாய்கள் களைத்துவிட்டதை அவர் அறியார் போலும்! யுத்தம் முடியவேண்டும் என்று சிப்பாய்களின் பெற்றோர் நேர்த்தி வைப்பது அவருக்குத் தெரியாது போலும்!

எப்படியோ, அவரது சத்தில்லாத சங்கற்பத்தை அவரால் நிறைவேற்ற முடியாது என்பது மட்டும் உண்மை. அது ஒன்றும் புதியதுமல்ல.

ஜனாதிபதி தேர்தலே அவர் கனவும் நினைவுமாக இருப்பதால் அந்த உண்மை அவருக்குத் தெரியப்போவதில்லை. அதனால் அவர் எதிர் [illegible] தவிர்க்க முடியாததாகும்.

## ஜூலை

★ ஜூலை 1 — யுத்தக் கைதிகள் விடுதலை விடயத்தில் ஒரு முடிவு வரும்வரை தாம் கொழும்பு திரும்ப விரும்பவில்லை என கைதிகளின் உறவினர்கள் 41 பேரும் தெரிவித்தனர்.

★ ஜூலை 2 — அரச ஊழியருக்கு வழங்குவதாக அறிவித்த சம்பள உயர்வை பாதுகாப்பு செலவைக் காரணங்காட்டி அரசு நிறுத்துவதாக அறிவித்தது.

குடா நாட்டு மக்களின் போக்கு வரத்துக்காக பூநகரிப் பாதையை திறந்துவிடுமாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அகதிகளுக்கான ஐ. நா தூதரக அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

★ ஜூலை 4 — இராணுவக் கட்டுப் பாட்டில் உள்ள மன்னார்த் தீவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இன்ஸ்பெக்டர் உட்பட 4 பொலீஸார் உயிரிழந்தனர்.

★ ஜூலை 5 — கரும்புலிகள் தினம் தமிழீழப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டது. கரும்புலிகள் மத்தியில் தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் உரையாற்றினார்.

★ ஜூலை 6 — கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை 3 முதல் 5 மாதங்களில் நடத்தலாம் என தெரிவுக் குழுவிடம் முப்படைத் தளபதிகள் நேரில் சிபாரிசு.

★ ஜூலை 9 — யாழ்ப்பாணத்தில் சாகும்வரை உண்ணா விரதம் இருக்க கைதிகளின் உறவினர் முடிவு.

★ ஜூலை 14 — மீண்டும் ஆரம்பிக்க இருந்த சமது சாகும்வரையான உண்ணா நோன்பை யுத்தக் கைதிகள் ஒத்திவைத்தனர்.

★ ஜூலை 16 — முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி படுகொலையில்

> கடந்த வருடத்தை திரும்பிப்பாருங்கள்

விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு இருப்பதாக ஸ்கொட்லண்ட் விசாரணைக் குழு அறிக்கை வெளியிட்டது.

கிளிநொச்சி நகரப் பகுதியில் பொம்மர்கள் குண்டு வீசின. ஒருவர் பலியானார்.

★ ஜூலை 21 — கொழும்பு நகரில் பலநூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்,

★ ஜூலை 23 — கறுப்பு ஜூலை 1993 இன் நினைவு நாளையொட்டி கொழும்பில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கை. மட்டக்களப்பில் நடைபெறவிருந்த ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் ஜனாதிபதியும், பிரதமரும் கலந்து கொள்வது பாதுகாப்பு காரணங்களால் கைவிடப்பட்டது.

★ ஜூலை 24— புத்தளம் இலவங்குளத்தில் பொலீஸ் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல். 10 பொலிஸார் பலி.

கறுப்பு ஜூலையை ஒட்டி லண்டன் நகரில் தமிழர் பேரணி நடந்தது.

★ ஜூலை 25 — விடுதலைப் புலிகளின் ''இதய பூமி I'' தாக்குதல் நடவடிக்கையில் மண்கிண்டி மலை முகாம் தகர்ந்தது. 70க்கும் அதிக படையினர் கொல்லப்பட்டனர். 5 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான ஆயுத தளபாடங்களை புலிகள் அள்ளி எடுத்தனர். 10 வேங்கைகள் வீரச்சாவடைந்தனர்.

★ ஜூலை 27 — திருநெல்வேலி, கோப்பாய் பகுதிகளில் சுப்பசொனிக் விமானங்கள் நடத்திய அகோரக் குண்டு வீச்சில் 4 பள்ளிச் சிறுவர்கள் உட்பட 5 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

★ ஜூலை 28 — திருமலையில் சுமித்திரா முகாமுக்குச் சமீபமாக இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் 6 படையினர் மரணம்.

★ ஜூலை 29 — கிளாலிக் கடற் பகுதியில் தமிழ் பயணிகள் மீது கடற்படை நடத்திய வெறியாட்டத்தில் எட்டுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொலையுண்டனர்.

யுத்தக் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

★ ஜூலை 30 — வட்டுக்கோட்டை சித்தன்கேணி பகுதியில் சுப்பசொனிக் மற்றும் புக்கரா விமானங்கள் தாக்குதல். மாணவர் ஒருவர் மரணம்.

ஆனையிறவு ஆகாய, கடல், வெளிசமரில் வீரச்சாவடைந்த வேங்கைகள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலயத்தை கொடிகாமத்தில் மூத்த தளபதி திரு. பொட்டு அம்மான் திறந்து வைத்தார்.

## ஓகஸ்ட்

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் மக்கள் வாழ்விடங்கள் மீதான படையினரின் வான் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள் அதிகரித்திருந்தன. தெல்லிப்பளை துர்க்கை அம்மன், பறாளாய் முருகன் போன்ற வழிபாட்டு இடங்கள்கூட தாக்குதல் இலக்குகளாகின.

படையினரின் கடல் ஆதிக்கத்துக்குப் பெரும் சவாலாக இடம்பெற்ற கடற்கரும் புலிகளின் வெற்றிகரத் தாக்குதல்கள் அந்த மாதத்தின் முக்கிய சம்பவங்களாகும். கிளாலியிலும், பருத்தித்துறை கடலிலும் கடற்படையினரின் படகுகளைத் தகர்த்து கடற்புலிகள் வீரகாவியம் படைத்த மாதம் இதுவாகும்.

★ ஓகஸ்ட் 3 — பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் குண்டுகள் வெடிப்பு. 6 பேர் பலி.

★ ஓகஸ்ட் 4 — உண்ணாவிரதம் இருந்த யுத்தக்கைதிகளில் 12 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி.

★ ஓகஸ்ட் 7 — சாம்பல்தீவில் விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதல். 6 பொலீஸார் பலி.

★ ஓகஸ்ட் 11 — கடும் காற்றினால் கிளாலிக் கடலில் பயணிகள் படகுகள் கவிழ்ந்தன. 17 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

★ ஓகஸ்ட் 12 — யுத்தக் கைதிகளின் உறவினர் அனைவரும் கொழும்பு திரும்பினர். சிங்கள யுத்தக்கைதிகள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

அமைச்சரவை மாற்றம் நடந்தது. ஏ. ஸி. எஸ். ஹமீத் மீண்டும் வெளியுறவு அமைச்சரானார்.

★ ஓகஸ்ட் 16 — மனித நேய அடிப்படையில் சிங்கள கைதி ஒருவர் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரனால் விடுவிக்கப்பட்டார்.

★ ஓகஸ்ட் 19 — தமிழீழ நீதியாளர்கள், சட்டவாளர்கள் தமிழீழ தேசியத் தலைவரின் முன் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

★ ஓகஸ்ட் 20 — ஜெனிவாவில் சிறுபான்மை இனப் பாதுகாப்புக்கான ஐ. நா. துணைக்குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப் படவிருந்த பிரேரணை இறுதி நேரத்தில் அரசின் தலையீட்டால் வாபஸ்பெறப்பட்டது.

★ ஓகஸ்ட் 21 தமிழீழ நீதி நிர்வாகத் துறையின் முதலாவது நீதிமன்றம் சுன்னாகத்தில் திறந்துவைக்கப் பட்டது.

★ ஓகஸ்ட் 22 — கெற்பலியில் படையினரின் ஷெல்வீச்சுக்கு இலக்காகி இருபெண்களும் குழந்தையும் பலியாகினர்.

★ ஓகஸ்ட் 23 — பலாலி படையினர் ஏவிய ஷெல்லுக்கு தொண்டமனாறில் இரு சிறுமிகள் யிரிழந்தனர்.

★ ஓகஸ்ட் 24 — கோம்பயன்மணல் மயானத்தில் மண்கிண்டி மலை மாதிரி முகாம் கண்காட்சி ஆரம்பமானது,

★ ஓகஸ்ட் 25 — மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பின் வெற்றிநாள் தமிழீழம் எங்கும் கொண்டாடப்பட்டது.

★ ஓகஸ்ட் 26 — கிளாலி கடலில் பயணிகளை தாக்க வந்த இரு கடற்படைப்படகுகளை கடற்புலிகள் தகர்த்தனர். 10 படையினர் உயிரிழப்பு.

மேஜர் நீலவன் (வரதன்), கப்டன் மதன் ஆகிய இரு கடற்கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

★ ஓகஸ்ட் 27 — மாதகலில் மும்முனைத் தாக்குதல்களுடன் முன்னேற முயன்ற படையினரை புலிகள் விரட்டி அடித்தனர். டாங்கிகள், கவச வாகனங்கள் சேதம், பொம்மர் மற்றும் ஷெல்வீச்சில் பொதுமக்கள் 5 பேர் பலியாகினர். பறாளாய் முருகன் கோயில் படையினரின் தாக்குதலில் சேதமடைந்தது.

★ ஓகஸ்ட் 28 — தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில் சுற்றாடலில் விமானக் குண்டு தாக்குதல்கள் இடம்பெற்றன. பொதுமக்கள் [illegible] அளவெட்டி தெல்லிப்பளை பகுதியில் ஷெல் வீச்சில் இரு பொதுமக்கள் பலி. பத்தமேனியில் ஷெல் தாக்குதலில் பெண் மரணம்.

★ ஓகஸ்ட் 29 — பருத்தித்துறை முனைக் கடலில் கடற்படையினரின் 'டோறா' அதிவேகப்படகு ஒன்றை கடற்கரும்புலிகள் தகர்த்தனர். அதிகாரிகள் உட்பட 14 கடற்படையினர் பலி. மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகிய கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

கோண்டாவில், கொக்குவில் பகுதிகளில் இடம்பெற்ற விமானத்தாக்குதல்களில் மூன்று பொதுமக்கள் பலியாகினர்.

## செப்டம்பர்

★ செப். 02 — பருத்தித்துறை கடற்பகுதியில் இந்திய மீன்பிடிப் படகு கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது. மீனவர் ஒருவர் மரணம்.

★ செப். 03 — வடக்குப் பிரதேசக் கடற்பரப்பில் படகுகள் செல்வதற்கான தடை உத்தரவுப் பிரகடனம் ஒன்றை ஜனாதிபதி டி. பி.

> இரண்டு நாட்களுக்கு முன் கடந்து சென்ற 1993ஆம் ஆண்டில் உள்நாட்டில் இடம் பெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்வுகளின் தொகுப்பின் முதல் இரண்டு பகுதிகளும் நேற்றும், நேற்று முன்தினமும் வெளியாகின.
>
> மூன்றாவது பகுதி இன்று பிரசுரமாகின்றது.

விஜேதுங்கா வெளியிட்டார்.

★ செப். 04 — போராளிக் கலைஞர் தினேஷின் (அரியநாயகம் ஸ்ரீகாந்தாவின்) மிருதங்க அரங்கேற்றம் தொடர்பாக தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அறிக்கை வெளியிட்டார்.

★ செப். 06 — வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி வந்த கூட்டுப்படைகள் நடவடிக்கைத் தலைமையகம் கலைக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயர் மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோ பதவியை ராஜினாமாச் செய்தார்.

★ செப். 12 - கொழும்பில் தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

★ செப். 13 —இலங்கையின் கடற்தடைச் சட்டத்துக்கு இந்தியா உத்தியோக பூர்வமாக ஆட்சேபம் தெரிவித்தது.

வடமராட்சி கடற்பகுதியில் மீனவரைத் தாக்கிய கடற்படையினரை கடற்புலிகள் விரட்டி அடித்தனர்.

★ செப். 15 — தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நாட்கள் தமிழீழப் பகுதிகளில் எழுச்சியுடன் ஆரம்பமாகின. சுன்னாகம், ஊரெழு பகுதிகள் மீது படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் சிறுமி பலி.

★ செப். 18 — முல்லைத்தீவு மாத்தளன் பகுதியில் புக்காரா நடத்திய குண்டு வீச்சில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்த 13 பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். 40 பேர்வரை காயமடைந்தனர்.

★ செப். 25 — மட்டக்களப்பு — எல்லையில் வெலிக்கந்தவில் பொலீஸ் காவல் நிலையை புலிகள் தாக்கி அழித்தனர். 7 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்.

★ செப். 26 — தியாகி திலீபன் நினைவு தினம் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

செப் 27 — மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு — இராணுவ நடவடிக்கை ஆரம்பம். வங்காலையில் 6 படையினர் உயிரிழந்தனர்.

★ செப். 28 — சங்கத்தானையில் புக்காரா விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் பதுங்கு குழி இடிந்து 20 பேர் மரணமடைந்தனர்.

நந்தாவில் அம்மன் கோவில் மண்டபம் மீது பொம்மர்கள் நடத்திய தாக்குதலில் 3 பெண்கள் பலியாகினர்.

இயக்கச்சி பகுதியில் இருந்து படையினர் முன்னேற முயற்சி.

★ செப். 29 — ''ஒப்பரேஷன் யாழ்தேவி'' இராணுவ நடவடிக்கையை படை [illegible] கச்சியில் இருந்து முன்னே றிய [illegible] பட்ட படையினருடன் புலிகள் உக்கிரச் சமர் புரிந்தனர். கிளாலி நோக்கி முன்னேறி வந்த படையினரில் 125 பேர் கொல்லப்பட்டனர். 175க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். 82 வேங்கைகள் வீரச்சாவடைந்தனர். 2 டாங்கிகளும், 2 கவச வாகனங்களையும் புலிகள் அழித்தனர்.

அதே நாள் — படையினர் ஏவிய ஷெல்லுக்கு இலக்காகி நவக்கிரியில் 7 பொதுமக்களும் — பளைப் பகுதியில் மூவரும் உயிரிழந்தனர்.

## ஒக்டோபர்

★ ஒக். 2 — கச்சாய், கிளாலி பகுதிகளில் விமானங்கள் எரிகுண்டுகளை வீசின.

★ ஒக். 4 — கிளாலிப் பகுதியைக் கைவிட்டுப் படையினர் வாபஸ் பெற்றனர். தொண்டமனாறில் ஹெலித் தாக்குதலில் மூவர் கொல்லப் பட்டனர்.

★ ஒக். 5 — ஆயுதப் போரில் இணையுமாறு இளைஞர், யுவதிகளை அழைக்கும் அறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வெளியிட்டது.

தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகள் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது

★ ஒக். 6 — உலக ஆசிரியர் தினத்தை ஒட்டி தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரனின் அறிக்கை வெளியானது.

★ ஒக். 7 — விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னைக் கொல்வதற்குத் திட்டமிட்டிருப்பதாக தி மு. கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்த குற்றச்சாட்டை மறுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

நாகர்கோவில் கடற்பரப்பில் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் 4 மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

★ ஒக். 8 — வடமேல், தென்மாகாண சபைகளில், ஐ. தே. கவிற்கு முதலமைச்சர் பதவிகளை வழங்கியது தவறு என மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இராமேஸ்வரம் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். 4 இந்திய மீனவர்கள் பலி,

★ ஒக் 10 —'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையை அடுத்து தடைப்பட்டிருந்த கிளாலி — பூநகரி படகுச் சேவை மீண்டும் ஆரம்பமானது.

போராட்ட வரலாற்றில் முதன்முதல் வீரச்சாவடைந்த பெண் போராளி இரண்டாம் லெப். மாலதியின் நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது.

★ ஒக். 11— ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அனுரா பண்டார நாயக்கா இராஜினாமாச் செய்தார்.

★ ஒக். 14 — தமிழக மீனவர் விவகாரத்தால் எழுந்த நெருக்கடி நிலையை அடுத்து வெளியுறவு அமைச்சின் செயலாளர் பேர்னாட் திலகரத்தினா புதுடில்லி சென்றார்.

★ ஒக். 20 — 'குவாக்கர்' சமாதானக்குழு யாழ். வந்தது 'லங்காதீப' செய்தியாளர்கள் குழு ஒன்று யாழ். வந்து சேர்ந்தது.

★ ஒக். 24 — ஆனையிறவு இராணுவம் ஏவிய ஷெல்லினால் ஆலங்கேணி கரையில் இருவர் உயிரிழந்தனர்.

★ ஒக் 26 — அனுராபண்டார நாயக்கா ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்டார்.

★ ஒக். 28 — பல்கலைக்கழக அனுமதி முறையை எதிர்த்து யாழ் நகரில் கண்டனப் பேரணி நடைபெற்றது.

★ ஒக். 30 — அகதிகளுக்கான ஐ நா. தூதரக அதிகாரிகள் நால்வர் மடு அசதிகளால் தடுத்து வைக்கப்பட்டனர்.

## நவம்பர்

★ நவ. 1 — மேஜர் காந்தரூபன் நினைவு சிறுவர் இல்லத்தை தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கோப்பாயில் திறந்து வைத்தார்.

★ நவ. 2 — குடாநாட்டில் வாந்திபேதி நோயினால் 12 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

★ நவ. 7 — கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'நினைவழியா நாட்கள்' கவிதை நூலுக்கு தலைவர் வே. பிரபாகரன் வாழ்த்துச் செய்தி வழங்கினார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த தாம் யாழ். செல்லப்போவதாக சபாநாயகர் எம். எச். முஹம்மது தெரிவித்தார்.

★ நவ. 10 — தனது பணிகளை வடபகுதியில் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் அறிவித்தது.

★ நவ 11 — 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கை மூலம் பூநகரி இராணுவ, கடற்படைக் கூட்டுத் தளத்தை விடுதலைப் புலிகள் அழித்தனர். சுமார் ஆயிரம் படையினர் கொல்லப்பட்டனர். மூன்று நாள் தொடர்ந்து நடந்த சமரில் இரு கடற் கரும்புலிகள் உட்பட 458 போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஐந்து நீருந்து விசைப்படகுகள், டாங்கிகள், கவசவாகனங்கள், 120 எம். எம் பீரங்கிகள் உட்பட 30 கோடி ரூபா பெறுமதியான ஆயுத தளபாடங்களைப் புலிகள் அங்கு கைப்பற்றினர்.

★ நவ. 12 — யாழ். அரச செயலகம் மீது சுப்பசொனிக் விமானங்கள் தாக்குதல் நடத்தின. யாழ். அரச அதிபர், திரு. கா. மாணிக்கவாசகர் காயமடைந்தார்.

★ நவ. 13 — குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயம் மீது சுப்பசொனிக் விமானங்கள் குண்டு வீசின. 10 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அதேதினம் யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயத்துக்குள் சுப்பசொனிக் விமானம் றொக்கட் குண்டுகளை வீசியது.

★ நவ. 15 — கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி மீது சுப்பசொனிக் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின. பெண் ஒருவரும் இரு சிசுக்களும் உயிரிழந்தனர். ஆஸ்பத்திரி சேதமடைந்தது. முள்ளியவளை ஆஸ்பத்திரி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

கொழும்பில் கலவரம் ஏற்படும் ஆபத்தை அடுத்து

### இளநேசன்

பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டதாக அரசு அறிவித்தது.

★ நவ. 17 — கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட இருப்பதாக அரசு அறிவித்தது.

★ நவ. 21 — மாவீரர் வாரம் தமிழீழம் எங்கும் உணர்வு பூர்வமாக ஆரம்பமானது.

★ நவ. 26 — மாவீரர் தினத்தை யொட்டி தமிழீழ தேசியத் தலைவரின் விசேட செய்தி வெளியானது.

மாவீரர் தினத்தை யொட்டி தலைநகர் கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

★ நவ. 27 — தமிழீழ மாவீரர் தினம் எழுச்சி நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. வடபிராந்திய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா நியமிக்கப்பட்டார். மன்னார் மாவட்டம் கொண்டைச்சி, சிலாவத்துறை முகாம்களைக் கைவிட்டு படையினர் வெளியேறினர்.

★ நவ. 30— சிறுப்பிட்டி பகுதியில் மினிபஸ் மீது ஹெலி நடத்திய தாக்குதலில் 10 பயணிகள் காயமடைந்தனர். வடக்கு-கிழக்கு மாகாணத்துக்குப் புதிய ஆளுநராக திரு லயனல் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார்.

## டிசம்பர்

★ டிசம்பர் 2 — திருமலை ஈச்சிலம்பத்தையில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் அதிகாரி உட்பட 8 படையினர் கொல்லப்பட்டனர்.

★ டிசம்பர் 3 — குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயம் உட்பட மத வழிபாட்டிடங்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து நகரில் மௌன ஊர்வலம் நடைபெற்றது. வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடும் காற்றுடன் மழை பெய்தது.

★ டிசம்பர் 4 — இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா தமது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்தார்.

★ டிசம்பர் 5 — யாழ். நகர கரையோரப் பகுதிகளில் பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 60 பேர் வரை காயமடைந்தனர்.

★ டிசம்பர் 10 — இலங்கை மனித உரிமைச் சங்கங்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டங்கள் கொழும்பில் நடைபெற்றன.

★ டிசம்பர் 11 — பூநகரி கூட்டுமுகாம் தகர்ப்பு வெற்றி நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

★ டிசம்பர் 12 — யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடந்த பூநகரி வெற்றி விழா கூட்டத்தில் தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு வெற்றிக்கிரீடம் வெற்றிக்கேடயம் என்பன வழங்கப்பட்டன.

★ டிசம்பர் 17 — போர் முனையில் வீரசாதனை புரிந்த 17 போராளிகளுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பரிசு வழங்கி கௌரவித்தார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா நியமிக்கப்பட்டார்.

★ டிசம்பர் 18 — குடாநாட்டிலும் தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலும் பெய்த கடும் மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடு இழந்தனர்.

★ டிசம்பர் 19 — தேசத்தையும், மக்களையும் காட்டிக்கொடுத்து குற்றம் இழைத்த ஒன்பது பேருக்கு விடுதலைப் புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

★ டிச. 20 — மத்திய மாகாணசபையில் அங்கம் வகிக்கும் இ தொ. கா. உறுப்பினர்கள் 7 பேர் கடத்தப்பட்டனர்.

★ டிச. 22 — அரசசார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் சட்டவிதிகளை ஜனாதிபதி பிறப்பித்தார்.

★ டிச.27—அளம்பில் பகுதியில் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் மூவர் உயிரிழந்தனர்.

★ டிச. 30 - சாவகச்சேரி நகரப் பகுதியில் புக்காரா விமானம் நடத்திய றொக்கட் தாக்குதலில் எட்டுப்பேர் பலியாகினர். தென்னிந்திய திருச்சபைத் தேவாலயம் சேதமடைந்தது.

★ டிச. 31 இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா பதவி விலகி ஓய்வு பெற்றார்.

தென்மாகாண சபை கலைக்கப்பட்டது.

★

## லெப் ஜெனரல் ,,
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிடப்பட்ட ''இராணுவ சேவைகள் சட்ட விதிமுறைகள்'' என்ற சட்டக் கோவையிலேயே மேற்படி பதவி நிலைகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் விதிமுறைகள் இடம் பெற்றிருக்கின்றன.

லெப்டினன்ட் பதவி தரத்துக்கு மேல் உள்ள இராணுவ அதிகாரிகள் தாமாகப் பதவி விலகும் போதோ அல்லது வேறு பதவி நியமனங்களைப் பெறும் போதோ தமது இராணுவப் பதவிக் காலத்தின் போது வழங்கப்பட்ட பதவி நிலைகளை ஜனாதிபதியின் அனுமதியின்றி பயன்படுத்த முடியாது என்றும் அந்த சட்டகோவையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

★ ஜெனரல், கப்டன் தரங்களிலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள் தமது ஓய்வின் பின்னர், ஓய்வுபெற்றவர் என்பதைச் சுட்டிக் காட்டியே தமது பதவி நிலைகளைப் பயனபடுத்த முடியும்.

★ இராணுவத் தளபதி பதவிகளில் இருந்தவர்களுக்கு இரண்டாம் லெப்டினன்ட், கப்டன் தரத்திலான பதவிகளும் வழங்கப்படலாம். ஆனால் வர்த்தமானி மூலம் அவை தெரியப்படுத்தப்பட வேண்டும்.

★ இராணுவ அதிகாரிகளைப் பதவி விலக்கவோ அல்லது அவர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்கவோ ஜனாதிபதிக்கு மட்டுமே உரிமை உண்டு.

—இவ்வாறு அந்தச் சட்டக் கோவையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

> மரம் நட மறுப்பாரை காணின்
> நிலம் என்னும் நல்லாள் நகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் அக்கடமி

நல்லூர்
(J. M. C. முன்பாக)

**94 ஆம் ஆண்டிற்குரிய**
ஆண்டு 4 தொடக்கம் 11 வரையுள்ள
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
**05-01-1994** பி. ப 3 மணி
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
[முன் கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்]
[28728]

# பேரொளியின் சிறு தீபங்கள் ஒளி விழா கலை நிகழ்வுகள்

இன்று **02 - 01 - 1994**
ஞாயிறு மாலை 6 மணி
மெதடிஸ்த ஆலய முன்றில்
கட்டைவேலி

மெதடிஸ்த திருச்சபையினர்,
பருத்தித்துறை.
கட்டைவேலி சேகரம்.

(28719)

# நேரில் வரவும்

அடுத்தவர் எவராக இருப்பினும் அவருடன் மரியாதையுடனும் பண்புடனும் பழகும் தன்மை உங்களுக்கு இயல்பாகவே உண்டா?

அவ்வாறாயின், உங்களைப் போன்ற ஒருவரையே நாம் தேடுகிறோம்.

வாடிக்கையாளர்கள், வாசகர்கள், பொதுமக்களை வரவேற்று உபசரிப்பதில் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து உபசரிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமை மற்றும் நற்சான்றிதழ்களுடன் நாளை திங்கட்கிழமை (03-01-1994) முற்பகல் 11 மணிக்கு நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி),
**உதயன் வெளியீட்டகம்,**
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

# நியூட்டன் அக்கடமி

இருபாலை வீதி. கோண்டாவில்.

**கல்வியாண்டு - 1994**

**தை 5 இல் ஆரம்பம்;**
பாலர் வகுப்பு
ஆண்டு 01 முதல் ஆண்டு 11 வரை
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| கணிதம் | — எஸ். கருணாகரன் |
| விஞ்ஞானம் | — இரா. அருட்செல்வம் |
| | இ. ராஜா |
| தமிழ் | — ஞான. திருக்கேதீஸ்வரன் |
| சமூகக்கல்வி | — திரு. கணேஷ் |
| ஆங்கிலம் | — திரு சந்திரமௌளி |
| | செல்வி சிவசக்தி |
| வர்த்தகம் | — திரு. வேல்நம்பி |

''உயர்ந்த எதிர்காலத்திற்கு உங்கள் அன்புச் செல்வங்களை எம்மிடம் ஒப்படையுங்கள்''

(28720)

ஸ்ரீ முனீஸ்வரன் துணை

# மோட்சதீப பூசை அழைப்பு



## க. ஜெ. இராசசிங்கம்

யாழ், கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான பரிபாலகர் க ஜெ. இராசசிங்கம் அவர்களின் மோட்சதீப பூசை 03 - 01 - 1994 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் 9 மணிக்கு ஆரம்பமாகி பின் மோட்சதீபம் முனீஸ்வரன் தேவாலயத்தில் வைக்கப்படும். அத்தருணம் உறவினர், நண்பர்கள், அன்பர்கள், யாவரும் சமுகம் தந்து ஆத்மசாந்தி பூசையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, மருமக்கள், பேறாமக்கள்.

K. J இராசசிங்கம்,
54/12, சந்தனமாதா முன் ஒழுங்கை,
பண்டியன்தாழ்வு.
(6888)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி இரத்தினசோதி இரத்தினசிங்கம்

காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகவும், பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசோதி (றஞ்சி) 01-01-94 அன்று காலமானார். இவர் காலம் சென்ற இரத்தினசிங்கம், திருமதி நாகரத்தினம் இரத்தினசிங்கம் அவர்களின் அன்பு மகளும், தில்லைரத்தினம், இரத்தினகுமார், கலாமாலினி, கலாசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகநாதன், செந்தில்நாதன், பத்மராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிந்து, சாளட் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01-01-94 (சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி நாகரெத்தினம்
(தாயார்)
யு. சிவன்ராஜ்

பிரம்படிலேன்,
கொக்குவில்.
(சி/6887)

## நீக்கூஸ் அந்தோனிப்பிள்ளை

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், பாடசாலை ஒழுங்கை, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கூஸ் அந்தோனிப்பிள்ளை 31-12-1993இல் காலமானார். அன்னார் திரேசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்ரன் யேசுதாசன், காலஞ்சென்ற மனோ, நேசன், சீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அருளப்பு ராசம்மா, சுவாம்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், வெ. முத்தையா, வெ. எட்வேட் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02-01-1994) ஞாயிறு காலை 9மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பெரியவிளான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
அ. சீலன் (மகன்)

பாடசாலை ஒழுங்கை,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.
(28723)

## செபஸ்தியாம்பிள்ளை பேதுருப்பிள்ளை சின்னத்துரை

(இளைப்பாறிய இலிகிதர்-வர்த்தக வங்கி)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை பேதுருப்பிள்ளை சின்னத்துரை 31 - 12 - 1993 இல் காலமானார்.

இவர் திருமதி மனோன்மணி சின்னத்துரையின் அன்பு கணவரும், தங்கத்துரை (சாமுவல் சன்ஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட், நல்லூர், யாழ்ப்பாணம்), கீதா, றதா, ஜெயசீலன் (நோர்வே), விஜயசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானி, இவபராஜா (கணக்காளர், லைற் என்ஜினியறிங் என்ரபிறைஸ்சஸ், கொழும்பு), டொமினிக் சாவியோ (ஜீவா, ரெஜி (நோர்வே), ஜெயந்தி (ஜேமனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருஜன், டிலக்ஷன், பிரவீன், பிரசாத், டில்றுக்ஷன், டில்ஷான் ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் ஞாயிற்றுக்கிழமை (02 - 01 - 1994) காலை 9 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நல்லுடல் ஆனைக்கோட்டை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. அ. தங்கத்துரை
(மகன்)

''மனோஸ்தான்'',
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(6887)

## கந்தையா வள்ளியம்மை

இணுவில் மேற்கு திருமதி கந்தையா வள்ளியம்மை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சின்னையா கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குலேந்திரா (முன்னாள் உதவி அரசாங்க அதிபர் கோப்பாய்), சத்தியமூர்த்தி (தபால் அதிபர் நெல்லிப்பழை), கமலவேணி, சுந்தரமூர்த்தி (மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்ப உத்தியோகத்தர் - கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை), சத்தியவேணி, இரவீந்திரன் (கிராம சேவையாளர் - இணுவில்), விஜயவேணி, செல்வி அருட்சோதி, செல்வி கலாவதி (ஆசிரியை உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), சண்முகேந்திரன் (பெற்றோலியம் - கூட்டுத்தாபனம் கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகலைவரி, தவயோகராணி, யோகநாதன் (ஆசிரியர் - யா / அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை), கௌரி (பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி), ஆனந்தராசா (ஆசிரியர் இணுவில் இந்துக் கல்லூரி), ஜெஜா, சிவகுமாரன் (ஆசிரியர் இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவேந்திரன், மதுரா, மீரா, மதனமோகன், மதிவதனன் (U. K.), கலைவாணி, மைதிலி (மாணவிகள். வேம்படி மகளிர் உயர் கல்லூரி), அமுதவேணி (கொக்குவில் இந்துக் கல்லூரி), திருக்குமரன், துர்க்காயினி, மாறன், சிவசக்தி, மோகனராஜ், தயாளினி, அருண் பிரசாந், யமுனா, இராகவசொரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (2 - 1 - 94) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் பி. ப 1 மணிக்கு பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. சத்திய மூர்த்தி

இணுவில் மேற்கு.
(28729)

## சிவரத்தினம் சோமசுந்தரம்

காரைநகர், கோவளத்தைச் சேர்ந்த சிவரத்தினம் (மாஸ்ரர்) சோமசுந்தரம் 29-12-93 இல் காரைநகரில் காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மிதுனாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

தயவுசெய்து உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ இராஜேஸ்வரி
(மனைவி)

யாமாவளை,
சுழிபுரம்.
(28725)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02 - 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் வடக்குகல்வி வலய அதிகாரிகளுக்கான — மேற்பார்வைத் திட்டமிடல் தொடர்பான — கலந்துரையாடல் நாளை பிற்பகல் 1 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றும்படி வடக்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விசேடபாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், தொலைக்கல்வி நிலைய சிரேஷ்ட ஆசிரியர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

இக்கலந்துரையாடலில் வடமாராட்சி அலுவலர்கள் கலந்து கொள்ளத் தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஓய்வூதியம்

விவசாயிகளுக்கான டிசம்பர் மாத ஓய்வூதியம் எதிர்வரும் 6 ஆம் திகதி வழங்கப்பட உள்ளது.

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகக் கூடிய ..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இராணுவத் தலைமைப் பீடத்தை மறுசீரமைக்கவும் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு நவீன வாகனங்கள் உட்பட உபகரணங்கள் சாதனங்கள் ஆகியன அவசியமாகும். தரைப்படையினரின் ஆற்றலை விருத்தி செய்வதற்கு இது முக்கிய தேவையாகும்.

சகலரின் ஒத்துழைப்புடனும் ஆயுதப்படைகளின் கூட்டு முயற்சி மூலமும் நாட்டில் விரைவில் சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் நிலைநாட்டக் கூடியதாக இருக்கும்.

மிகவும் நெருக்கடியான நேரத்தில் முக்கிய பொறுப்பை ஏற்றுள்ள நான் நாட்டினதும், மக்களினதும் நலனுக்காகவும் வெற்றிக்காகவும் உழைப்பேன் — என்றார். [அ-உ-க-த]

# விக்னா கல்வி நிறுவனம்

**93** பரீட்சை தோற்றிய மாணவர்களுக்கான மீட்டல் புவியியல்
**திரு. குணராஜா**
ஆரம்பம்:
**02-01-1994**
காலை 10 மணி
(சி 6881)

# நாவலர் கல்விக் கழகம்

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
**கல்வியாண்டு 1994**
ஆண்டு 1 முதல் ஆண்டு 11 வரைக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
**09-01-1994**
(ஞாயிறு - காலை 7 30 மணி)
★ அனுமதிகளை 07 - 01 - 1994 க்கு முன் பெற்றுக் கொள்ளவும்.
(சி/6906)

# BOND கல்வி நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
4. 5 6. 7. 8. 9. 10
O/L வகுப்புகள்
(ஒவ்வொரு வகுப்பிலும் 35 மாணவர்கள் மட்டுமே அனுமதி)
மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்
**ஆரம்பம் 9 - 1 - 1994**
(28731)

## எழுதுநர் போட்டி பரீட்சை; விவரங்கள் கொழும்புக்கு

மத்திய மாகாண திணைக்களங்களுக்கான எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகளுக்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் தோற்றி, மத்திய அரசு சேவைக்காக யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியவர்களின் விவரங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கொழும்பில் நடந்த மத்திய அரச சேவைக்கான நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்களுக்காக யாழ்ப்பாணத்தில் விசேடமாக நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது.

இந்த நேர்முகப்பரீட்சையில் தோற்றியவர்களின் விவரப் பட்டியல் கடந்த திங்கட்கிழமை கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கை பூராவும் மத்திய அரசு திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு விரைவில் இவர்கள் நியமனம் செய்யப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (த-3)

## கெயர் அமைப்பு உதவி

யாழ்ப்பாணம், ஜன 2

யாழ் குடாநாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் விநியோகிக்க 10லட்சம் ரூபாவை வழங்க கெயர் இன்ரநெஷனல் அமைப்பு முன்வந்துள்ளது.

வெள்ளஅகதிகளுக்கு உதவுமாறு யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் விடுத்த கோரிக்கையின் பேரில் இந்த உதவியை வழங்குவதாகஅந்த அமைப்பு அரச அதிபருக்கு அறிவித்துள்ளது. (த-3)

## தமிழக அரசால் வழக்குகள் வாபஸ்

கடந்த ஆண்டு பத்திரிகைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எதிராக தமிழக அரசினால் தொடரப்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் வாங்கப்பட்டு விட்டன.

தமிழக அரசு விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது (த-எ)

தேசிய...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கான மொத்தச் செலவினம் 17 கோடி 60 லட்சம் ரூபா ஆகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (த-எ)

## வவுனியா இராணுவ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒரு தமிழரும் அங்கு குடியேற விருப்பம் தெரிவிக்கவில்லை. ஆனால் அரசு அவர்களைப் பலவந்தப்படுத்தி குடியமர்த்த முயற்சிசெய்து வருவதாகக் கூறப்படுகிறது.

சிங்கள, முஸ்லிம் காடையர்களுக்கும், இராணுவத்துக்கும் பயந்து அந்த மக்கள் அப்பகுதியில் குடியேற மறுத்து வருகிறார்கள்.

இதனிடையில் — செட்டிகுளம் முத்தையன் குளம் பகுதியில் அரசு சிங்கள, முஸ்லிம் காடையர்களைத் தொடர்ந்து குடியேற்றி வருவதாகக் கூறப்படுகிறது. (உ)

# மரண அறிவித்தல்கள்

## நாகம்மா சங்கரப்பிள்ளை

காரைநகர் புதுறோட்டை சேர்ந்த நாகம்மா சங்கரப்பிள்ளை சனிக்கிழமை 01-01-94 அன்று கொழும்பில் காலமானார் இவர் சிறாப்பர் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், கமலாதேவி, சுந்தரலிங்கம் (ஜேர்மனி), யோகேஸ்வரி (திருகோணமலை), நந்தகுமார் (ஆசிரியர் — கொழும்பு), சிவகுமார் (கனடா), வசந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசரத்தினம் (ஜேர்மனி), மனோரஞ்சிதம் (ஜேர்மனி), இராசையா (திருகோணமலை), மஞ்சுளா (சுகாதார இலாக்கா கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசையா (மலேசியா), காலஞ்சென்ற பாக்கியம், தில்லையம்பலம் (சிங்கப்பூர்), பொன்னம்மா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாணிக்கவாசகரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (2 - 1 - 94) பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
இ கமலாதேவி
(மகள்)

182/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (23157)

நாதஸ்வர வித்வான்

## மாவை எஸ். கே. இராசா

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆதீன வித்வானும், முதுபெரும் நாதஸ்வரக் கலைஞருமாகிய திரு. எஸ். கே. இராசா இறைபதம் எய்திவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வாலாம்பிகையின் அன்புக் கணவரும், சுப்புலக்ஷ்மி, இரவீந்திரன் (சவூதிஅரேபியா) நரேந்திரன் (இ. போ. ச. கோண்டாவில்), நிமலவாகினி, கமலாசனி (கனடா — முன்னாள் உதவி விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், தில்லைநாதன், பத்மலோசனா, விஜயகாந்தி, லக்ஷ்மிகாந்தன், ஸ்கந்தராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலன், காலஞ்சென்ற இராகுலன், பவித்ரா, பாலசிந்துஜா, ஆரணி, தர்ஷணா, வைதேகி, திருத்தணிகன், சஞ்சயன், சரண்யா, நிஜந்தன், ஹரிணி, வர்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-01-94) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கோண்டாவில் மேற்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்;
க. நரேந்திரன்
(மகன்)

மேஜர் செல்வராஜா வீதி,
கோண்டாவில்.
(28730)

## முருகேசு அம்பலவாணர்

வட்டுக்கோட்டை, உடுக்கியவளை, ஒழுங்கையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தபால் அதிபர் முருகேசு அம்பலவாணர் 1.1.94. இல் காலமானார்.

அவர் தையல்நாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகேசு, முத்துப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, டாக்டர் இராசதுரை, க. தையல்நாயகி, வே. வள்ளியம்மை, ச. பார்வதி, மற்றும் டாக்டர் நடராசா (சவுதிஅரேபியா) ஆகியோரின் சகோதரனும் காண்டீபனின் (கனடா) தந்தையும், திருமதி அ. மீராவின் மாமனும் செல்வி ஆரணியின் பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் 1.1.94 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி

மூளாய்வீதி,
உடுக்கியவளை வீதி,
வட்டுக்கோட்டை.
(28727)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org